விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 30 புதன்கிழமை (15.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## ஐ.நாவின் குற்றச்சாட்டை இலங்கை நிராகரிப்பு

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் முன்வைத்திருந்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

ஒக். 7,8,9ஆம் திகதிகளில்

## யாழ்.பல்கலைக்கழக 35ஆவது பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07 15

## பொய்யான வாக்குறுதிகளால் ஐ.நாவை ஏமாற்ற முடியாது

### அரசிடம் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொய்யான வாக்குறுதிகளை வழங்கிஐ.நாவையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு இனியும் எண்ணக் 15

கொரோனாவால்

## யாழில் இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்றால் யாழில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கரணவாய் கிழக் 15

கொரோனாவால்

## நாட்டில் மேலும் 136 பேர் பலி

(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 136 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் 15

மனித உரிமைகள் என்ற போர்வையில்

# இலங்கையில் தலையிடுவது எமக்கெதிரான செயற்பாடு

### ஐ.நா கூட்டத்தொடரில் சீனா தெரிவிப்பு

(ஜெனிவா)

**மனித உரிமைகள் என்ற போர்வையில் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவது தமக்கெதிரான செயற்பாடு என ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சீனா தெரிவித்துள்ளது.**

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது அமர்வு நேற்று முன்தினம் ஜெனிவாவில் ஆரம்பமானது.

இதில் ஆரம்ப உரையினை நிகழ்த்திய மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை குறித்து காட்டமான அறிக்கையினை வெளியிட்டிருந்தார். இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தில் முன்னேற்றம் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஐ.நா கூட்டத் தொடரில் தனது கருத்தைத்தெரிவித்த சீனா, மனித உரிமைகள் என்றபோர்வையில் சில நாடுகள் இலங்கையின் உள்ளக செயற்பாடுகளில் தலையிடுவது தமக்கெதிரான செயற்பாடு என சீனா தெரிவித்துள்ளது. (ம-3)

## நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு

### செப்ரெம்பர் 21க்குப் பின் சீராகும்



(கொழும்பு)

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு செப்ரெம்பர் 21ஆம் திகதிக்குப் பின் சீராகும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். 15

## தமிழ் மக்களின் பல பிரச்சினைகளை ஐ.நா ஆணையாளர் குறிப்பிடவில்லை

### நீதியரசர் விக்னேஸ்வரன் கவலை



(கொழும்பு)

தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பல விடயங்கள் பற்றி மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தமது அறிக்கையில் குறிப்பிடாதது மனவருத்தத்தைத் தருவதாக பாராளுமன்ற உறுப்பினர் 15

ஐ.நா முன்றலில்

## புலம்பெயர் தமிழர்கள் நீதிகோரி போராட்டம்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைப் பேரவை முன்றலில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் நீதிகோரும் போராட்டங்கள் நேற்று இடம்பெற்றிருந்தன. 15

## கொடிகாமத்தில் வீதி விபத்து

இளைஞன் பலி



15

104 வயது மூதாட்டி உட்பட

## வவுனியாவில் 11 பேர் கோவிட்டால் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக 104 வயது மூதாட்டி உட்பட 11 மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகா 15

# பாடசாலைகளை திறப்பது குறித்து இன்று இறுதி முடிவு - கெஹலிய

(கொழும்பு)

பாடசாலைகளை மீண்டும் திறக்கும் முறைகுறித்து இன்று முடிவு எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

தரம் ஒன்று முதல் தரம் 06 மற்றும் தரம் 12,13 வகுப்புகளுக்கு பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமா என்பது குறித்து கல்வியியலாளர்கள் தற்போது கலந்துரையாடி வருகின்றனர் என்று அவர் கூறினார்.

நேற்று காலை கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்தார்.

கல்வி வல்லுநர்களின் முன்னுரிமையின்படி மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கத் திட்டமிடப்பட்டு வருவதாகவும் சுகாதாரஅமைச்சர்குறிப்பிட்டார்.(ம-03)

# பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் அவர் நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்ற போது அவருக்கு அங்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்போது அவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-03)

# தென்மராட்சி வரணியில் வர்த்தக நிலைய உரிமையாளர்மீது வன்முறை கும்பல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி - வரணி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர்மீது வன்முறைக் கும்பலினால் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6 மணிக்கு வரணிஇயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஊரடங்கு அமுலில் இருக்கும் வேளையில் பருத்தித்துறை வீதி வரணியில் அமைந்துள்ள கடை ஒன்றின் உரிமையாளர்மீது 6 பேர் கொண்ட கும்பல் கொட்டன் பொல்லுகளோடு வந்து அத்துமீறி வீடு புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் அவரது தொலைபேசியையும் பறித்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளது.

இதையடுத்து கடை உரிமையாளர் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமம் பொலிஸார் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை அதிரடியாகக்கைது செய்துள்ளதுடன் ஏனையோரை வலைவீசிதேடுதல்வேட்டையை மேற்கொண்டுவருகின்றனர். (ம-03)

# நாட்டில் நேற்று மேலும் 2,473 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனாத்தொற்று உறுதியான மேலும் 2,473 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 490,955 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,354 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 415,649 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

# 400 இந்து ஆலயங்கள் இலங்கையில் உடைப்பு

## இந்திய பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 400 வரையிலான இந்து ஆலயங்கள் இலங்கைப் படையினரால் உடைக்கப்பட்டுள்ளதாக ஜோர்ஜ் பெர்ணான்டஸ் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

George Fenandas Foundation என்ற அமைப்பின் தலைவர்களும் இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்களுமான திரு. அருண் நாயக் மற்றும் திரு. உத்தம் காண்டே போன்றவர்கள் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய அவசர கடிதத்திலேயே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்கள்.

இலங்கையில் சுமார் 10,000 வரையிலான தமிழ்ப் பெண்களை இலங்கைப் படையினர் பாலியல் வல்லுறவு புரிந்துள்ளதாகவும் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

படையினரால் 3 இலட்சம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் 98ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளதாகவும் 400 இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அவர்கள், இந்தியப் பிரதமர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 – 12 – 1962

இறப்பு 12 – 09 – 2021

### வரதலட்சுமி சுப்பிரமணியம்

(ஆசிரியை – யா/ வட்டு. மத்திய கல்லூரி)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதலட்சுமி சுப்பிரமணியம் கடந்த 12.09.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - தங்கரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கந்தசாமி - சரஸ்வதியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் சுப்பிரமணியத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் அபிரா, அருட்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ரூபகாந்தன் வாலலட்சுமி, லங்கநாதன், காலஞ்சென்ற வராகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை மறுதினம் (17.09.2021) வெள்ளிக்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

சு. அருட்குமரன் (மகன்)
076 457 9924

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



மலர்வு 04 – 05 – 1940

உதிர்வு 09 – 09 – 2021

### திருமதி பூமணி கிருஷ்ணபிள்ளை

பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூமணி கிருஷ்ணபிள்ளை கடந்த 09.09.2021 (வியாழக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி - சின்னாச்சி தம்பதியரின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் வசந்தாதேவி, இராசகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவசுப்பிரமணியம், சபாரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் குணரத்தினம் (பிரான்ஸ்), தியாகரத்தினம், அருந்ததி, சுமதி, கோபிநாத், தர்மரத்தினம் (சுவிடன்), மணிவண்ணன் ஆகியோரின் பெரியம்மாவும் பாமினி (பிரான்ஸ்), ரஜிதா, செந்தூரன், பஜீரதன், சுரேந்தினி (சுவிடன்), ரூபமதி, சசிகலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுஷங்கா, லக்ஸ்மன், பகீரதி, கர்சிகன், தாரணி, திலக்ஸ், திஷாந், தர்மிதன் ஆகியோரின் பாட்டியும் காலஞ்சென்ற பரஞ்சோதி, சபாபதிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகளும் வல்லிபுரம், சின்னத்துரை, இராமசாமி பாக்கியம், தர்மலிங்கம் லக்ஷ்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை (16.09.2021) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதனை,
பருத்தித்துறை.

0033662865521 (பிரான்ஸ்)
076 979 8972
077 400 1823

தகவல்:-
சிவசுப்பிரமணியம்
குடும்பம்

# 60ஆவது பிறந்த நாளும் மணிவிழா வாழ்த்தும்



தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அதிபர்

## திரு.

# இரா.ஸ்ரீநடராசா

அவர்கள் அரச சேவையில் ஓய்வு பெற்று 15.09.2021 இல் தனது 60 ஆவது பிறந்த நாளில் கால் பதிக்கின்றார். வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் மாணவனாக, ஆசிரியராக, அதிபராக திரு. ஸ்ரீநடராசா அவர்கள் பல ஆண்டுகள் பின்னிப் பிணைந்திருந்து பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் கொண்டுவர அயராது உழைத்தவர்.




தனது மகளை அப்பாவை விட நேசிக்கவும்
நன்கு பார்த்துக் கொள்ளவும்
அவள் வாழ்வை வளப்படுத்தி சிறப்பாக்கிக் கொடுக்க
வேறு ஒரு ஆடவர் எவரும் இருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை
அப்படிப்பட்ட என் தந்தைக்கு இந்தச் செல்ல மகளின்
பிறந்த நாள் நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றேன்.

தொண்டைமானாறு


(C-2651)

அன்புடன் வாழ்த்தும்
திருமதி கங்காதரன் லக்சிக்கா

# இந்தியா- இங்கிலாந்து டெஸ்ட் போட்டி ரத்தானதற்கு ஐ.பி.எல் காரணமில்லை

‘இங்கிலாந்தில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள கிரிக்கெட் வாரியத்திடம் தலைமை பயிற்சியாளர் ரவிசாஸ்திரி அனுமதி பெறவில்லை. இந்திய கிரிக்கெட் வாரியத் தலைவர் சவுரவ் கங்குலி நேற்று முன்தினம் அளித்த ஒரு பேட்டியில்,

அதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கும் திட்டம் எதுவுமில்லை. மைதானத்தை தவிர வேறு எங்கும் செல்லக்கூடாது என்று யாரையும் கட்டுப் படுத்த முடியாது. அப்படி செயற்படுவது என்பது மனிதனால் முடியாத காரியமாகும் என தெரிவித்த அவர்,



கடைசி டெஸ்ட் போட்டி ரத்து செய்யப்பட்டதற்கு ஐ.பி.எல். போட்டி எந்தவகையிலும் காரணம் கிடையாது. அணியின் உதவி பிசியோதெரபிஸ்ட் யோகேஷ் பார்மருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டதால் இந்திய வீரர்கள் அச்சம் அடைந்து களம் இறங்க மறுத்தனர். ஏனெனில் பிசியோதெரபிஸ்டுடன் வீரர்கள் நெருங்கி பழகியதால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படுமோ? என்று கலக்கம் அடைந்தனர். அதனால் அவர்கள் மீது குற்றம்சுமத்த முடியாது.

இந்திய கிரிக்கெட் வாரியம் ஒருபோதும் பொறுப்பற்ற முறையில் செயல்படாது. மற்ற நாட்டு கிரிக்கெட் வாரியங்களின் நலனையும் நாங்கள் மதிக்கிறோம். ரத்து செய்யப்பட்ட டெஸ்டை தனி போட்டியாக கருதாமல் இங்கிலாந்து தொடரின் 5ஆவது மற்றும் கடைசி போட்டியாக நடத்தவே நாங்கள் விரும்புகிறோம்’ என்று தெரிவித்தார்.(6)

## சுசந்திகாக்கு கொரோனாத் தொற்று



இலங்கையின் முன்னாள் ஒலிம்பிக் பதக்க வீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்கவிற்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் முடிவையடுத்து அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவரது இரண்டு குழந்தைகளும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அவர் இரண்டு உலக சம்பியன்ஷிப் பதக்கங்களை வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6)



## சிம்பாவேயை வீழ்த்தி தொடரை சமப்படுத்தியது அயர்லாந்து

முன்னதாக நடைபெற்ற அயர்லாந்து- சிம்பாவே அணிகளுக்கு இடையேயான இருபதுக்கு -20தொடரை அயர்லாந்து 3-2 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்த நிலையில்,

சிம்பாவே -அயர்லாந்து அணிகள் மோதிய 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. முதலில் ஆடிய சிம்பாவே 34 ஓவரில் 134 ரன்னில் சுருண்டது. டக் வொர்த் விதிப்படி அயர்லாந்துக்கு 32 ஓவரில் 118 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி 22.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 118 ரன் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் 3 போட்டி கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. முதல் ஆட்டத்தில் சிம்பாவே வெற்றிபெற்றது. 2-வது போட்டி முடிவில்லை. இரு அணிகளுக்கு இடையேயான 20 ஓவர் தொடரை அயர்லாந்து 3-2 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்தது குறிப்பிடத்தக்கது. (6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## பெங்களூர் அணியின் மாற்று வீரர்களின் திறமையை பார்க்க ஆவலாக உள்ளது

### கோலி தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஐ.பி.எல். 2ஆவது பகுதி ஆட்டத்தில் விளையாட சில வீரர்கள் மறுத்துள்ளனர். இதனால் அவர்களுக்குப் பதிலாக மாற்று வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்தில் இருந்து ஆர்.சி.பி. அணி கப்டன் விராட் கோலி துபாயில் தனிமைப்படுத்தும் காலம் முடிந்ததும் அணியுடன் இணைய இருக்கிறார்.

இந்த நிலையில் மாற்று வீரர்கள் சிறந்த திறன் கொண்டவர்கள் என விராட் கோலி தெரிவித்துள்ளார். இது குறித்து கூறுகையில் “நான் ஒவ்வொருவருடனும் தொடர்பில் இருந்தேன். நாங்கள் கடந்த மாதத்தில் யார் அணியில் இணைகிறார்கள், வெளியேறுகிறார்கள் என்பதை குறித்து ஆலோசனை நடத்தினோம்.

எங்களுடைய முக்கிய வீரர்கள் வெளியேறிய நிலையில், தரம் வாய்ந்த மாற்று வீரர் களை தேர்வு செய்துள்ளோம்.

புதிதாக அணியில் இணைந்தவர்கள் குறிப்பாக இங்குள்ள சூழ்நிலையில் சிறப்பாக செயற்படகூடியவர்கள்.

அவர்கள் மொத்த அணியுடன் இணைந்து பயிற்சி மேற் கொள்ள இருப்பதை பார்க்க ஆர்வமாக இருக்கிறேன். அதேபோல் முதல் பகுதியில் சிறப்பாக செயற்பட்டதை போன்று 2அவது பகுதியையும் சிறப்பாக தொடங்க ஆர்வமாக இருக்கிறேன்” என்றார். (6)

## டென்னிஸ் தரவரிசையில் ரபேல்நாடல் பின்னடைவு



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் அரையிறுதிக்குப் பிறகு விளையாடாமல் இருக்கும் முன்னணி வீரரான ரபேல் நடால், தரவரிசையில் 6ஆவது இடத்திற்கு சரிந்துள்ளார்.

டென்னிஸ் உலகில் முன்னணி வீரராக திகழ்ந்து வருபவர் ரபேல் நடால். 20 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனைப் படைத்துள்ளார். பிரெஞ்ச் ஓபன் அரையிறுதியில் அவருக்கு காயம் ஏற்பட்டது.

அதில் இருந்து தற்போது வரை ரபேல் நடால் டென்னிஸ் போட்டியில் களம் இறங்காமல் உள்ளார். இதனால் உலக டென்னிஸ் தரவரிசையில் 6ஆவது இடத்திற்கு பின் தங்கியுள்ளார்.

அமெரிக்க ஓபனில் சம்பியன் பட்டத்தை தவறவிட்டாலும், ஜோகோவிச் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார்கள். டொமினிக் தீம் 6ஆவது இடத்தில் இருந்து 8ஆவது இடத்திற்கு பின்தங்கியுள்ளார்.

அமெரிக்க ஓபனை வென்ற ரஷிய வீரர் டேனில் மெட்வதேவ் 2ஆவது இடத்திலும், ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் 3ஆவது இடத்திலும், ஒலிம்பிக் சாம்பியன் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 4ஆவது இடத்திலும் உள்ளனர். (6)

# இராசிபலன்

15.09.2021
ஆவணி 30, புதன்கிழமை
நவமி பிற்பகல் 1.01 மணிவரை
மூலம் முற்பகல் 8.24 மணிவரை
சுபநேரம் -4.33- 6.03 மணிவரை
இராகுகாலம் -12.03- 1.33 மணிவரை
சந்திராஷ்டமம்- ரோகிணி

வளவன்



**மேஷம்**: உறவினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.



**ரிஷபம்**: கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



**மிதுனம்**: பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.



**கடகம்**: உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**சிம்மம்**: பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



**கன்னி**: பேச்சில் கனிவு பிறக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.



**துலாம்**: சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**விருச்சிகம்**: சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், உறவினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.



**தனுசு**: காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள்.



**மகரம்**: ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், தேவையற்ற மனச் சஞ்சலங்கள் தவிர்ப்பது நல்லது.



**கும்பம்**: பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.



**மீனம்**: பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசனசுகமுண்டு, கௌரவமான நாள்.

வெளிக்காட்டப்படாத அன்பு முழுமையான அன்பு அன்று

# நாட்டை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திறக்க திட்டம்

## சுதர்ஷினி பெர்னான்டோபுள்ளே

(கொழும்பு)

**நாட்டில் தற்போது அமுலாகியுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மேலும் நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.**



எனவே, அடுத்த வாரம் முதல் நாட்டை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திறந்து பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி வழங்கல் மற்றும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய அந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த 4 வாரங்களாக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் காரணமாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிஏற்பட்டுள்ளதுடன், மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(நி-5)

# பட்டதாரிகளின் பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்கு தீர்மானிக்கவில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளின் பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் ஊடகவியளாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டளஸ் அழகப்பெரும இதனை குறிப்பிட்டுள்ளார்.

பயிற்சிகாலத்தை மேலும் 6 மாதத்திற்கு நீடிப்பதற்கான பத்திரம் அமைச்சரவைக்கு முன் வைக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

53 ஆயிரம் பயிற்சிபட்டதாரிகளில் 18 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் அந்த பணிகள் இன்னும் நிறைவடையவில்லை என தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அந்த பணிகளை விரைவுப்படுத்தி, எஞ்சியவர்களையும் அரச சேவையில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினரை அறிவுறுத்துமாறு ஜனாதிபதி விடயதான அமைச்சர்களை பணித்ததாக அமைச்சர் டளஸ்அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கிளை அலுவலகங்கள் இன்று திறப்பு

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மாத்தறை, கண்டி, குருநாகல் மற்றும் வவுனியா பிராந்திய அலுவலகங்கள் இன்று முதல் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிந்த அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் சாதாரண சேவைகள் வழமைபோல் நடைபெறும் அதேவேளை கடவுச்சீட்டுக்களை ஒருநாள் சேவையின் கீழ் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்தவர்கள் மன அழுத்தத்தால் பாதிப்பு

## மனநல மருத்துவர் வெளியிட்ட தகவல்

(கொழும்பு)

கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்த சிலர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக அங்கொடை மனநல மருத்துவர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நோய் குணமடைந்த பிறகும் ஏற்படக்கூடிய மூச்சு, பேச்சு மற்றும் நடை பயத்தால் இந்த நிலை ஏற்படுவதாக மருத்துவர் குறிப்பிட்டார் .இதன் காரணமாக சிலர் மனஅழுத்தத்தால் பாதிக்கப்படுவதாக கூறிய அவர், அத்தகையவர்கள் 1926 என்ற எண்ணுக்கு அழைக்கலாம் அல்லது அரச மருத்துவமனைகளில் உள்ள மனநல கிளினிக்குகளில் ஆலோசனை பெறலாம் எனத் தெரிவித்ததுடன் வீட்டில் உள்ள சிறுவர்களுக்கு கூட இந்த நிலை ஏற்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# வேதன ஏற்றம், மேலதிக நேர கொடுப்பனவுகளை வழங்குங்கள்

## சித்த மருத்துவ பணியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

வருடாந்த வேதன ஏற்றம் மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவுகள் வழங்காமை தொடர்பாக சித்த மருத்துவ பாதிக்கப்பட்ட பணியாளர்களினால் கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, சுகாதார சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர்கள் பராமரிப்பு அமைச்சின் கீழ் சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பணியாளர்கள் ஆகிய எமக்கு கடமை நேரத்தினை விட மேலதிகமாக விடுமுறை நாட்களிலும் இரவுக் கடமையிலும் பணியாற்றுகிறோம். கொவிட்-19 காலத்திலும் நாடு முடக்கப்பட்ட காலப் பகுதியிலும் நாம் தொடர்ச்சியான பணிக்கு அமர்த்தப்படுகின்றோம்.

இவ்வாறான சூழ்நிலையில் எமக்கு கடந்த நான்கு மாதங்களாக மேலதிக நேரக்கொடுப்பனவுகள் வழங்காது மறுத்து வருகின்றனர். மற்றும் இதற்கு பதிலாக பதில் விடுமுறையும் வழங்க மறுப்புத் தெரிவிக்கின்றனர். மற்றும் அரசாங்கத்தினால் சுகாதார பணியாளர்களுக்காக ரூபாய் 7500 வீதம் 3 மாதங்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட்ட போதும் எமக்கு அவ் நிதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான செயனல் நாமும் எமது குடும்பமும் ஏமாற்றத்தினையும் மனவிரக்தியையும் ஏற்படுத்துகிறது என சித்த மருத்துவ பாதிக்கப்பட்ட பணியாளர்களினால் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (7-5)

# ‘சில்ப அபிமானி’ கைப்பணிப் போட்டி விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் கைப்பணி கலைஞர்களை தேசிய ரீதியில் கௌரவப்படுத்தும் நோக்கில் தேசிய அருங்கலைகள் பேரவை வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்துடன் இணைந்து வருடாந்தம் நடத்தும் கைப்பணிப் போட்டி சுகாதார விதி முறைகளுக்கு அமைவாக இவ்வாண்டும் ஒக்ரோபர் 21,22 ஆகிய 2 திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழிற்துறைத் போட்டிற்குரிய விண்ணப்ப படிவங்களை பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள தொழிற்துறை திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கைப்பணியாளர்கள் தங்கள் ஆக்கங்களை ஒக்ரோபர் முதலாம் வாரம் போட்டிக்காக சமர்ப்பிப்பதற்கு தயார் நிலையில் இருத்தல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் களிமண் உற்பத்திகள், தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள், பிரம்பு மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள், உலோக கைப்பணிப் பொருட்கள், ஆபரணங்கள் (உலோக, கற்பதித்த நானாவித ஆபரணங்கள்), சங்கீத உபகரணங்கள், கைத்தறி நெசவு உற்பத்திகள் (சாறி, துவாய், தலையணையுறை, பெட்சீற், கைக்குட்டை, சாறம்), துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருட்கள் (தையல் எம்ரோயிடர், இயந்திர எம்ரோயிடர், துணிகளில் வர்ணம், பெக்வெர்க், பாரம்பரிய துணி வேலைப்பாடு), பற்றிக், ரேந்தை, மர உற்பத்திப் பொருட்கள், தோற் பொருட்கள், கற்களிலான (கருங்கல்) கைப்பணிப் பொருட்கள், பாரம்பரியக்கலை வரைபுகளும் சிற்பங்களும், தென்னை, பனை, கித்துள் சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருட்கள் (கடதாசி, பல்ப் சார்ந்த உற்பத்திகள், மரத்தூள் பொருட்கள், சிப்பிஓடுகள், பல தரப்பட்ட மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருட்கள்), நினைவுச் சின்னங்கள் போன்ற கைப்பணித்துறை பிரிவுகளின் அடிப்படையில் ஆக்கங்கள் உள்வாங்கப்படுகின்றன என்பதை வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தின்மாகாணப்பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் அறிவுறுத்தியுள்ளார். (7-5)

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் விசேட பூசை வழிபாட்டில் ஞானசார தேரர்



(யாழ்ப்பாணம்)

இன மத வேறுபாடு இன்றி அனைவரும் கொரோனா தொற்றில் இருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணத்தில் சிறப்பு பூசை வழிபாட்டினை மேற் கொண்டதாக கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாடு கொரோனா தொற்றில் இருந்து விடுபட வேண்டி இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தின் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் சிலர் நோயினால் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள் அது சிங்களவராக இருக்கட்டும் தமிழராய் இருக்கட்டும், எந்த இனத்தவராயினும் அனைத்து இனத்தை சேர்ந்தவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சிலர் ஒரு நேர உணவுக்கு கூட வழியில்லாமல் உள்ளார்கள். அதேபோல் சிலருக்கு வேலை இல்லாத பிரச்சனை காணப்படுகின்றது. அத்தோடு இந்த நோய் தொற்றுக்கு உள்ளானோர் சிகிச்சை பெறுவதற்கு அவதிப்படுகிறார்கள். கடவுள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக குறிப்பாக பௌத்த மதத்தில் நாம் பின்பற்றும் ஒரு விதிமுறையை போல இந்து மதத்தில் உள்ள ஆகம விதி முறையை இணைத்து இந்த தொற்றில் இருந்து நாடு விடுபட கடவுளிடம் வேண்டி ஒரு விசேட பிரார்த்தனை மேற்கொண்டுள்ளோம்.

தற்பொழுது பௌத்த இந்து இஸ்லாம் என்ற பேதத்தை மறந்து அனைவரும் இணைந்து இந்த கொரோனா நோயிலிருந்து விடுபடுவதற்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

இந்த கொரோனா நோயின் தாக்கமானது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய அனைத்து விடயங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது இது இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகத்தில் உள்ள மக்கள் இந்த நோயிலிருந்து விடுபட வேண்டும். மக்கள் துன்பத்தில் இருந்து விடுபட வேண்டியே இந்த விசேட பூசை வழிபாட்டினை ஏற்பாடு செய்துள்ளோம் அரசியல் இன மத வேறுபாடு இன்றி அனைத்து மக்களும் நோயிலிருந்து விடுபட வேண்டியே இந்த வழிபாட்டினை மேற்கொண்டுள்ளோம். குறித்த வழிபாட்டின் மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என நம்புவதாக தெரிவித்தார். (7-5-6-33)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் “உயர்த்தும் கரங்கள்” செயற்திட்டத்திற்கு கிடைத்த வேண்டுகோளுக்கு இணங்க 788 சிற்றூர்த்தி சங்கத்தில் தொழில் புரியும் சாரதிகள், நடத்துநர்கள், நேரகணிப்பாளர்கள் என சுமார் 64 பேருக்கு நாட்டில் கொவிட் தொற்றினால் ஏற்பட்டிருக்கும் முடக்க நிலையை கருத்திற் கொண்டு தலா 1500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசிவேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு மட்டுவில் தெற்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ வே.தேவேந்திரக்குக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம் பெறும். (7-5)




# சட்டவிரோதமாக மாடு வெட்டியவர் கைது

(அராலி)

யாழ். இளவாலை பொலிஸ் பிரிவிட்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் சட்டவிரோதமாக இறைச்சிக்காக மாடு வெட்டியவரை இளவாலை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 12 கிலோ எடையுடைய மாட்டு இறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் குறித்த சந்தேக நபர் மீது பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (7-5-104)



அவுஸ்ரேலியாவில் இயங்கி வரும் தொண்டு நிறுவனமான வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் டிஜிட்டல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் வறிய மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன்களும் வளம் குறைந்த பாடசாலைகளுக்கு தலா 5 கணனிகளும் அண்மையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனினால் வழங்கப்பட்டன. (படம் : சிவசாந்தன்)

# இலங்கைக்கு தொடர்ச்சியான அழுத்தங்களை பிரயோகிக்க பிரித்தானியா தயார்



## உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையின சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அவசியமான அழுத்தங்களை தொடர்ச்சியாக வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கரிசனைகளை ஏற்பதாகவும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்தார்.

இது குறித்து டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் விமர்சகர்கள் உள்ளடங்கலாக இலங்கை தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்த ஆணையாளரின் அதிருப்தியை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறான தொரு சூழ்நிலையில் இலங் கையில் மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையின சமூ கத்தின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு அவசியமான அழுத்தங்களை பிரித்தானியா தொடர்ச்சியாக வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## பால்மா வேண்டுமென்றால் யோக்கட்டுகள் வாங்குங்கள்

# நிர்ப்பந்திக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

## திஸ்ஸ கோரிக்கை

(கொழும்பு)

தற்போது நாட்டில் பால் மாவிற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பால்மாவை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதுவும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் பால்மா ஒன்றை வாங்குவதற்கு 6 யோக்கட்டுகளை கொள்வனவு செய்யுமாறு சில வர்த்தகர்கள் நிர்ப்பந்திப்பதாக கடும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

பால்மா பக்கெட்டின் விலையுடன் 6 யோக்கட்டுகளின் விலையும் சேர்வதால் பொதுமக்கள் பாரிய அசௌகரியத்திற்கு முகம் கொடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனால் அவ்வாறான வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# பெற்றோரால் கைவிடப்பட்டு தொற்றுக்குள்ளான குழந்தைக்கு மருத்துவமனையில் காதுகுத்து நிகழ்வு

(திருமலை)

திருகோணமலையில் பெற்றோர்களால் கைவிடப்பட்ட நிலையில் சிறுவர் இல்லத்தில் வளர்ந்து வரும் 11 மாத குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த குழந்தை, கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் நிலையில் அங்குள்ள வைத்தியசாலை ஊழியர்



களினால் அக்குழந்தைக்கு காதுக்குத்து நிகழ்வு நேற்று நடத்தப்பட்டது.

வைத்தியசாலை ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்ட குறித்த செயற்பாட்டை பலரும் பாராட்டியுள்ளனர். (நி-5)

# தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீக்க எதிர்பார்ப்பு- ரமேஷ் பத்திரண



(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவின் விளைவாக கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில், எதிர்வரும்வாரம் ஊரடங்கு உத்தரவு நீக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கொரோனா பணிக்குழு பரிசீலனை செய்த பின்னரே இந்த விடயத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# அசாத் சாலியின் பிணைக் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி சார்பாக தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்ப கோரிக்கை கொழும்பு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. மாவனெல்லையில் புத்தர் சிலை உடைப்பு சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் உறவு வைத் திருந்த குற்றச்சாட்டில் அசாத் சாலிக்கு எதிராக விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அசாத் சாலியின் சார்பில் அவரது வழக்கறிஞர் மைத்திரி குணரத்னவால் பிணை விண்ணப்ப கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் குறித்த பிணை கோரிக்கையை நிராகரித்துள்ளதுடன், அவரை தொடர்ந் தும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (நி-5)

# மருத்துவமனையில் இருந்து கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

கொழும்பு- நாரஹேன்பிட்டி பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றிலிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையின் முதலாம் மாடியிலுள்ள கழிப்பறையொன்றிலிருந்தே இந்த கைக்குண்டு மீட்கப்பட் டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-5)


31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு
06
04
1943

இறப்பு
16
08
2021

அமரர்.திருமதி. தங்கம் கந்தையா

மீளாத் துயில் கொண்டு எமை ஆறாத் துயரில்
ஆழ்த்திச் சென்ற உம் கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகிறோம்...

எம் குடும்பத் தலைவி நோயுற்றிருந்த போதும் மறைவுச் செய்தி அறிந்த போதும் நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மரணச்சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

**நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக நினைவஞ்சலி நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.**

பட்டின சபை வீதி,
மானிப்பாய்.

(7801)

பாலர் கந்தையா
கணவர்

# ஆப்கானுக்கு 606 மில். நிதி தேவை உலக நாடுகளிடம் ஐ.நா கோரிக்கை

(காபூல்)

**ஆப்கானிஸ்தானுக்கு நிகழாண்டு மட்டும் 606 மில்லியன் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.4,440 கோடி) தேவை எனவும், உலக நாடுகள் அவற்றை வழங்க வேண்டுமெனவும் ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.**

மேலும், ஆப்கானிஸ்தானில் போர் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ ஐ.நா.வின் மத்திய அவசர கால உதவி நிதியிலிருந்து 20 மில்லியன் டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ. 148 கோடி) அளிக்கப்படும் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர் நிலை நன்கொடையாளர்கள் மாநாட்டில் இந்த வேண்டுகோளை ஐ.நா. முன்வைத்தது.

மேலும் இந்த மாநாட்டில் திரட்டப்படும் நிதியின் பெரும் பங்கு ஐ.நா வின் உலக உணவுத் திட்டத்துக்கு அளிக்கப்பட வேண்டும்' என ஐ.நா. தெரிவித்துள்ளது. ஐ.நா. அகதிகள் முகாமையின் தலைவர் ஃபிலிப்போ கிராண்டி காபூலுக்குச் சென்றுள்ளார். 'நிகழாண்டு மட்டும் வீடுகளை இழந்து வெளியேறிய 5 இலட்சம் பேர் உட்பட 35 இலட்சம் பேரின் நிலைமை, அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகள் குறித்து ஆய்வு செய்ய உள்ளதாக' அவரது சுட்டுரையில் தெரிவித்திருக்கிறார். (7-5)

# இங்கிலாந்து பிரதமரின் தாயார் காலமானார்



(லண்டன்)

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனின் தாயார் சார்லட் ஜான்சன் வால் (வயது 79) லண்டன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திடீரென உயிரிழந்து உள்ளார்.

இதுபற்றி அவரது குடும்பத்தினர் அறிக்கையில் உறுதி செய்துள்ளனர். கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த கட்சியின் வருடாந்த மாநாட்டில் பிரதமர் ஜான்சன் பேசும்போது, அவருடைய குடும்பத்தில் உயரிய அதிகாரம் படைத்தவர் என அவரது தாயாரை குறிப்பிட்டு பேசினார். (7-5)

# ஆயுதம் தாங்கிய ரோபோ இஸ்ரேல் நிறுவனம் அறிமுகம்

(ஜெருசலேம்)

ரிமோட் மூலம் இயங்கும் ஆயுதம் தாங்கிய ரோபோவை இஸ்ரேலை சேர்ந்த ஒரு நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த ரோபோவினால் போர் நடைபெறும் பகுதியில் ரோந்து செல்ல முடியும் எனவும், ஊடுருவலைக் கண்காணித்து துப்பாக்கியால் சுட முடியும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

4 சக்கரங்களில் இயங்கும் இந்த ரோபோவை இஸ்ரேல் அரசுக்குச் சொந்தமான இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் நிறுவனமான 'ரெக்ஸ் எம்கே!!' தயாரித்து நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தியது.

இது குறித்து அந்நிறுவனத்தின் துணைத் தலைவர் ரனி அவ்னி கூறுகையில், இந்த ரோபோவில் இரு இயந்திரத் துப்பாக்கிகள், கமராக்கள், சென்ஸார்களை பொருத்த முடியும். போரில் ஈடுபட்டுள்ள படையினருக்காக உளவுத் தகவல்களை ரோபோ சேகரிக்க முடியும். காயமடைந்த வீரர்களை அழைத்துச் செல்லவும், அருகில் உள்ள இலக்குகளைத் தாக்கவும் இந்த ரோபோவால் இயலும்' என்றார்.

இஸ்ரேல் இராணுவம் இதே போன்ற 'ஜாகுவார்' என்ற சிறிய வாகனத்தை காசா முனை பகுதியில் ரோந்து பணியில் ஏற்கெனவே பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (7-5)

# குழந்தைகளுக்கான தடுப்பூசி அடுத்த மாத இறுதியில் விற்பனை

(நியூயோர்க்)

அமெரிக்காவில் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான கொவிட் தடுப்பூசி அடுத்த மாத இறுதியில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் கொரோனா இரண்டாவது அலையில் அதிக அளவிலான குழந்தைகள் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு கழகத்தின் முன்னாள் ஆணையரும், "பைசர்" நிறுவன இயக்குனர் குழு உறுப்பினருமான டாக்டர் ஸ்காட் கோட்டியப் கூறியதாவது: எங்கள் நிறுவனம் குழந்தைகளுக்கான கொரோனாத் தடுப்பூசியை தயாரித்து உள்ளது. இதற்கான சோதனை இறுதிக் கட்டத்தில் உள்ளது. ஒக்டோபர் இறுதியில் இந்த தடுப்பூசிக்கு அரசு அங்கீகாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத் தடுப்பூசி குழந்தைகளுக்கான தடுப்பூசி என்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் சோதனை மேற்கொள்ளப்படுகிறது என அவர் கூறினார். இதேபோல மொடர்னா நிறுவனமும் குழந்தைகளுக்கான தடுப்பூசி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தின் தடுப்பூசிக்கும் விரைவில் அரசு ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (7-5)

# கொரோனா உருமாறும் நிலையில் மூன்றாவது டோஸ் பயனில்லை

## பிரான்ஸ் விஞ்ஞானிகள்

(பாரிஸ்)

இரண்டு டோஸ் தடுப்பு மருந்துகளுடன் மூன்றாவதாக பூஸ்டர் டோஸ் செலுத்துவது பாதுகாப்பானது என்று உலக விஞ்ஞானிகள் பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர். ஆனால் இதற்கு மாற்று கருத்தும் அவ்வப்போது எழுவதை மறுக்க முடியாது.

உலக சுகாதார அமைப்பு தலைவர் டெட்ராஸ் அதனோம் கெப்ரயேஸஸ் முன்னதாக மூன்றாவது பூஸ்டர் டோஸ் தடுப்பு மருந்தை இந்த ஆண்டு இறுதிவரை எந்த நாடும் தங்கள் குடிமக்களுக்கு செலுத்த வேண்டாம் என்று கோரிக்கை வைத்தார்.

உலகின் பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளுக்கு குறைந்த பட்சம் 10 சதவீத தடுப்புமருந்து கிடைத்ததும் மூன்றாவது டோஸ் குறித்து ஆலோசிக்கலாம் என்று அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

இதனை வழிமொழியும் வகையில் தற்போது பிரான்ஸ் விஞ்ஞானிகளும் தங்கள் ஆய்வின் மூலமாக கருத்து ஒன்றை கூறியுள்ளனர். கொரோனா பல்வேறு மாதிரியாக உருமாறும் நிலையில் மூன்றாவது டோஸ் செலுத்துவதால் பயனில்லை எனத் தெரிவித்துள்ளனர். லான்செட் இதழில் இந்த ஆய்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது. (7-5)

# 3.80 லட்ச ரூபாய் செலுத்தி கிரீன் கார்ட் பெறலாம்

## புதிய மசோதா விரைவில் நிறைவேற்றம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 1.4 லட்சம் கிரீன் கார்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும் இந்தியர்களுக்கு பல்வேறு காரணங்களால் கிரீன் கார்ட் பெறுவது சிக்கலாக உள்ளது. இந்நிலையில் கிரீன் கார்ட் வழங்குவது தொடர்பாக அமெரிக்க பாராளுமன்றத்தின் புதிய மசோதா நிறைவேற்றப்பட உள்ளது.

இது குறித்து அமெரிக்காவின் குடியேற்ற சட்ட நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறியிருப்பதாவது:-அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேற்றம் பெற விரும்பும் வெளிநாட்டவர்களுக்காக புதிய மசோதா விரைவில் நிறைவேற்றப்பட உள்ளது. இந்த மசோதா சட்டமாக்கப்பட்ட பின் கிரீன் கார்ட் பெறுவதில் நிலுவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் 3.80 லட்ச ரூபாய் கூடுதலாக செலுத்தி கார்ட் பெற்றுக்கொள்ள முடியும். "எச் - 1பி விசா" வைத்திருப்பவர்களும் தங்களின் வயது வரம்பு முடியும் தருவாயில் இருந்தாலும் அல்லது முடிந்து இருந்தாலும் புதிய சட்டம் அமுலான பின் கூடுதலாக பணம் செலுத்தி கிரீன் கார்டு பெறலாம் எனத் தெரிவித்தார். (7-5)

# ஆங் சான் சூகிக்கு உடல்நலக் குறைவு

(நேபிடா)

மியான்மரில் கடந்த பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கவிழ்த்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.

மேலும் அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி மற்றும் அதிபர் வின் மைண்ட் ஆகியோரை இராணுவம் சிறை பிடித்து வைத்துள்ளது. இதில் தலைவர் ஆங் சான் சூகி மீது தகவல் தொடர்பு சாதனங்களை சட்டவிரோதமாக இறக்குமதிசெய்து வைத்திருந்தமை, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தை மீறியமை, காலனித்துவ கால அதிகாரப்பூர்வ ரகசிய சட்டத்தை மீறியமை, உட்பட 6 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. இதற்காக ஆங் சான் சூகி தான் சிறை வைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து காரில் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இந்நிலையில் தனக்கு உடல் நலம் சரியில்லை என அவர் தனது வக்கீல்களிடம் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து வக்கீல்கள் நீதிபதியிடம் வழக்கு விசாரணையை ஒத்திவைக்க கோரிக்கை வைத்தனர். நீதிபதிகள் அதை ஏற்று வழக்கு விசாரணையை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர். இதைத்தொடர்ந்து ஆங் சான் சூகி மீண்டும் காரில் அவர் சிறை வைக்கப்பட்டுள்ள இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (7-5)

# எதிர்கட்சியினரும் அதிகாரத்தை சரியாக பயன்படுத்தவில்லை

## ஆசு மாரசிங்க

(கொழும்பு)

கொரோனாவை ஒழிப்பதற்காக அரசாங்கம் மாத்திரமல்லாது எதிர்க்கட்சியினரும் தமது அதிகாரத்தை சரியாக பயன்படுத்தவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

அரசாங்கம் மாத்திரமல்லாது எதிர்கட்சியும் கொரோனா ஒழிப்பை புறந்தள்ளி விட்டு, தமது அரசியல் நிகழ்ச்சிநிரலை மட்டுமே முன்னெடுத்து வருகின்றது.

தொற்று நோய் பரவிவரும் சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்த வேண்டும் எனக் கூறிய எதிர்க் கட்சித் தலைவரின் மூளையை பரிசோதிக்க வேண்டும்.



அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை மாற்றுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீவு காண முடியாது என மேலும் தெரிவித்தார்.(7-5)



மன்னார் தாராபுரம் துருக்கி சிட்டி பகுதியில் அமைந்துள்ள கொரோனா இடை நிலை சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைபெற்று வரும் கொரோனா தொற்றாளர்களின் நலனை கருத்திற் கொண்டு நூறு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் உள்ளடங்களாக ஒரு தொகுதிப் வாருட்கள் நேற்றைய தினம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வட பிராந்திய தேவ சபையின் ஊழியர்களினால் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதனிடம் கையளிக்கப்பட்டது. (படம்:-ஜோசப்நயன்)



மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் கிராமத்தில் "உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" எனும் திட்டத்தின் கீழ் மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடு நேற்றைய தினம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் வைபவ ரீதியாக உரிமையாளரிடம் கையளித்தார். (படம்:-ஜோசப்நயன்)

# குடியியல் வழக்குக் கோவையில் திருத்தம் சட்டமா அதிபரினால் உறுதி

(கொழும்பு)

பிரதிவாதியின் சிரத்தையின்மையை கருத்திற் கொண்டு அவருக்கு எதிராக நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பொன்று, 14 நாட்களில் குறித்த சிரத்தையின்மைக்கான நியாயமான காரணங்கள் ஏதும் இருந்தமையை முறைப்பாட்டாளருக்கு அறிவித்தலுடன் நீதிமன்றத்திற்கு பிரதிவாதியால் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோளின் அடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்பை மாற்றிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் குடியியல் வழக்குக் கோவையில் உள்வாங்கப்பட்டுள்ளது.

குறித்த ஏற்பாடுகளைப்பயன்படுத்தி பிரதிவாதியொருவருக்கு தாமதப்படுத்தும் தந்திரோபாயத்தைப் பயன்படுத்தவும் முறைப்பாட்டாளரின் நியாயமான உரித்தைக் கொண்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு இயலுமை உள்ளமை கண்காணிக்கப்பட்டுள்ளது.

குடியியல் வழக்குக் கோவை 88(2) ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் அரசியலமைப்பு உறுப்புரைகளுக்கு ஏற்புடையதென சட்டமா அதிபரால் உறுதி செய்யப்பட்டுள்ளது. (7-5)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியதையே ஐ.நா.மனித உரிமை உயர்ஸ்தானிகரும் கூறியுள்ளார்

## சுமந்திரன் எம்.பி

(நெளுக்குளம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியதையே ஐக்கிய நாடுகள் மனித உரிமை உயர் ஸ்தானிகரும் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று வவுனியாவிற்கு பிரத்தியேக விஜயம் ஒன்றினை மேற்கொண்ட அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,ஜூன் மாதத்திலே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் நிறுவனத்தோடு பொறுப்புக்கூறல் விடயத்திலேயும், நல்லிணக்கத்திலேயும் தாங்கள் இணைந்து செயற்படத் தயார் என்று டுவிட்டர் மூலமாக அவர் விடுத்த செய்தியை மேற்கோள்காட்டி அதை தாங்கள் கவனித்திருப்பதாகவும் அதனை நடைமுறையிலே நாங்கள் காண விரும்புகிறோம் என்று கூட்டத் தொடரினை ஆரம்பித்திருக் கிறார். அது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம். ஜூன் மாதத்திலே அப்படியாக கோட்டாபய ராஜபக்ஷ அந்த டுவிட்டர் செய்தியை கொடுத்தபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாங்கள் அதை திரும்ப டுவிட் செய்து அதனை நாங்கள் அப்பொழுதே வரவேற்று, அதனை நடைமுறையிலே காண்பதற்கு, காத்திருக்கிறோம் என்று நாங்களும் கூறியிருந்தோம்.

அதற்கு மேலதிகமாக, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத் திலே, அவர்களுடைய உறவுகள் எதிர்பார்க்கிற மாதிரியான நீதி கொடுக்கப்பட வேண்டும் என்று திரும்பவும் அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

இலங்கையிலே இருக்கின்ற, தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிற அவசரகால பிரகடனம் குறித்து, அதனால் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து, அதன் மூலமாக இராணுவமயமாக்கப்படுதல், இன்னும் தீவிரமாகலாம் என்பதனையும் கூறி, உறுப்பு நாடுகள், இலங்கையை இந்த நிலைமைகளை தீவிரமாக கண்காணிக்க வேண் டும் என்பதனையும் கூறி ஒரு அழைப்பு விடுத்திருக கிறார்.

உறுப்பு நாடுகள் இந்த விடயத்தை குறித்து, இன்றைக்கு பொதுவான அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள்கின்ற போது, இலங்கை சம்பந்தமாக தங்களுடைய கரிசனையை, இந்த வாய்மூல அறிக்கையிலே எழுப்பப்பட்ட கரிசனைகளோடு ஒட்டி வெளிப்படுத்த வேண்டும் என்று நாங்கள் உறுப்பு நாடுகளிடத்திலே கோரிக்கை விடுக்கிறோம்.

46/1 என்கின்ற தீர்மானத்திலே மிகவும் விசேட மாக எடுக்கப்பட்ட ஒரு முடிவு சாட்சியங்களை சேகரிப்பதும், அவற்றை பாதுகாப்பதற்குமான பொறிமுறை இந்த வாய்மூல அறிக்கையின் இறுதியிலே, அது சம்பந்தமாக தான் எடுத்திருக்கிற நடவடிக்கைகளையும், ஏற்கனவே ஒரு இலட்சத்து இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட ஆவணங்கள் ஐக்கிய நாடுகளிடம் கையிலே இருப்பதாகவும், அதனை ஆரம்பமாக கொண்டு மிகுதி வேலைகள், விரைவில் ஆரம்பமாகும் என்றும், சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது இந்த ஆவணங்களை சேகரிக்கின்ற, பாதுகாக்கின்ற இந்த பொறிமுறை சம்பந்தமாகவும், அதற்கு தேவைப்படுகின்ற நிதி சம்பந்தமாகவும் அம்மையார் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்பொழுது பொதுச்சபை இந்த மாதம் நியூ யோர்க்கிலே கூடவிருக்கிறது. அதிலே இதற்கு தேவையான நிதியையும் நாடுகள் வழங்கி தீர்மானிக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கி றோம் என்றார். (7-5-6-299)

# இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் அனுமதிக்கப்படாத இடியன் துப்பாக்கியினை வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் தருமபுர பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுர பொலிஸ் நிலையத்தில் விசாரணைகள் நடைபெற்றுவருவதுடன் சந்தேக நபர் இன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.(7-5-6-316)

# கொரோனாவால் முதியவர் மரணம் காப்பகம் தனிமைப்படுத்தப்பட்டது

(நெளுக்குளம்)

வவுனியா பம்பைமடுப்பகுதியில் அமைந்துள்ள காப்பகம் ஒன்றில் வசித்து வந்த முதியவர் இருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணமடைந்துள்ளமையால் குறித்த இல்லம் தனிமைப்படுத்தப்பட்டது.

குறித்த முதியவர்கள் சுகயீனம் காரணமாக நேற்று முன் தினம் மரணமடைந்தார். அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த காப்பகம் தனிமைப்படுத்தப்பட்டதுடன், அங்கு தங்கியிருப்போருக்கு அன்ரியன் பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(7-5-6-299)

# சுற்றுலாப் பயணிகளால் ஆபத்து

## சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



**(கொழும்பு)**

**வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு அழைப்பதன் ஊடாக நாடு மீண்டும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படுவதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கடந்த சில தினங்களான இந்திய சுற்றுலாப் பயணிகள் பலர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர்களின் தனிமைப்படுத்தப்படுத்தல் நடவடிக்கைகள் முறையாக மேற்பார்வை செய்யாததால், இது மிகவும் ஆபத்தான நிலை என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# மாலைதீவுக்கு மணல் ஏற்றுமதி; உண்மைக்கு புறம்பானது

## புவிசரிதவியல் பணியகம் அறிக்கை

(கொழும்பு)

மாலைத்தீவில் புதிய தீவு ஒன்றை நிரப்புவதற்காக இலங்கையில் இருந்து மணல் ஏற்றுமதி செய்யப்பட்டதாக வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானது என புவிசரிதவியல் மற்றும் அளவை சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் நாயகம் சஜ்ஜன டி சில்வா அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

மாலைத்தீவில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை நிறுவனம் ஒன்றுக்கு தேவையான வர்த்தக ரீதியிலான மணல் தொகை மாத்திரம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், குறித்த மணலானது குழாய் இணைப்பு மற்றும் நீர்நிலைகளை நிரப்புவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

அதற்காக 8 க்யுப் மணல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள நிலையில், க்யுப் ஒன்றுக்கு 180,000 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் அறவிடப்பட்டுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் அளவை சுரங்க பணியகம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

## திமோர்-இலங்கை

# இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

திமோர்-லெஸ்டே (கிழக்கு திமோர்) அரசாங்கத்துடன் முறையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த வெளியுறவு அமைச்சினால் முன்வைக்கப்பட்ட திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

திமோர் - லெஸ்டே அரசாங்கம், இலங்கையுடன் இராஜதந்திர தொடர்புகளை முறையான வகையில் உறுதிப்படுத்திக்கொள்வதற்கான விருப்பத்தை இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இந்தியா, சீனா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் பல தற்போது அந்நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

கிழக்குத் திமோருடன் இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாகவும் அதேபோல் இராஜதந்திர தளங்களில் இலங்கையின் தலையீடுகளில் அந்நாட்டின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதும் முக்கியமாகும்.

அதற்கமைய, அந்நாட்டுடன் முறையான இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5)

# சம்பளத்தில் 5 சதவீத வரி அரசாங்கத்தின் தீர்மானம் அல்ல

## என்கிறார் டலஸ்

(கொழும்பு)

ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுபவர்களுக்கு 5 சதவீத வரி விதிக்க வேண்டும் என்ற அமைச்சர் பந்துல குணவர்தனவின் கருத்து அரசின் நிலைப்பாடல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்தகைய திட்டம் வாய்மொழியாகவோ அல்லது அமைச்சரவையிலோ பேசப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு பகுதிகளில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2405

**மகேஷ்**

ஊரடங்க எவ்வளவு நாள் வேணும்னாலும் நீடித்துக் கொள்ளுங்க...



ஆனால் ஒரு நாள் பர்மிஷன் கொடுங்க மனைவியை மாமனார் வீட்டில் விட்டுட்டு வர...

**மது**

சாப்பிடுறான், தூங்குறான், போனை நோண்டறானே தவிர ஒரு நாளாச்சும் குளிக்கிறானா பாரு



**கஜி**

ஊரடங்கு முடிய இன்னும் 4 நாள்தான் இருக்கு என்று சந்தேசப்படுறதா?



இன்னும் எத்தனை நாள் நீடிக்க போறாங்க என்று கவலைப்படுறதா?

**பிரியன்**

இந்த கொரோனாவுக்கு தடுப்பு மருந்து எங்கையோ இருக்கிற ஒரு குடும்பஸ்தன் தன் பொண்டாட்டி தொல்லை தங்க முடியாம கண்டு பிடிக்க போறான் சேர்...



**சினேகா**

செய்தி:-ஆய்வின் போது உலக வரைபடத்தில் வட கொரியாவுக்கு பதிலாக இலங்கையைக் காட்டிய அமெரிக்க வீரர்கள்!



அடேய் பார்த்துடா! அணுகுண்டை மாறி நம்ம தலையில போட்டுடப் போறான்

**கீர்த்தி**

லாக்-டவுன் முடிஞ்சதும் என்ன பண்ண போறாய்... அடுத்த லாகக் டவுனுக்காக வெயிற் பண்ண போறன்...



பரதேசி நாய் வேலைக்கு போறேன் என்று சொல்றானா பாரு...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பருப்பின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு

**(கொழும்பு)**
**இலங்கையில் பருப்பின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**



சந்தையில் பருப்பின் விலையானது தற்போது 250 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அவுஸ்ரேலியா மற்றும் கனடாவில் இருந்தே நாட்டிற்கு பருப்பு கொள்வனவு செய்யப்படுகிறது.

இந்த நிலையில், கனடாவில் விளைச்சல் குறைந்துள்ளமையால் பருப்பின் விலை அதிகரிக்கும் சாத்தியம் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)
தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் வாரத்தில் நான்கு நாட்கள் மாத்திரம் தபால் சேவைகள் இடம்பெறவுள்ளதுடன் தபால் நிலையங்களும் செயற்படவுள்ளன.

ஆரம்பத்தில் இந்த சேவையை வாரத்திற்கு ஆறு நாட்கள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கோவிட் பரவலை கருத்தில் கொண்டு நான்கு நாட்களுக்கு சேவையை மட்டுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தபால் அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை 17ஆம் 18ஆம் திகதிகளில் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வாரம் முதல் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் அனைத்து தபால் நிலையங்களும் மூடப்பட்டு இருக்கும். (நி-5)

# எரிவாயுவின் விலையை உயர்த்துமாறு கோரிக்கை

(கொழும்பு)
உள்நாட்டு சமையல் எரிவாயுவின் விலையை உயர்த்துமாறு எரிவாயு நிறுவனங்கள் அரசாங்கத்திடம் புதிய கோரிக்கைகளை முன் வைத்துள்ளன.



உலக சந்தையில் எரிவாயு விலை உயர்வு காரணமாக இந்த கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

உள்ளூர் சந்தையில் எரிவாயு பற்றாக்குறை இருப்பதை அமைச்சு ஏற்றுக்கொள்கிறது என்றும் ஆனால் அது முன்பு போல இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


அமைச்சகத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி தற்போது எரிவாயு உற்பத்தி நடந்து வருகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் எரிவாயுவின் விலை குறித்து எரிவாயு நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# வெளிநாடு பறந்த துமிந்த சில்வா

(கொழும்பு)
மரணதண்டனைக் கைதியாக இருந்து பொது மன்னிப்பில் விடுதலையான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா வெளிநாடு சென்றுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2012ஆம் ஆண்டு கொழும்பு, கொலன்னாவ பிரதேசத்தில் சக கட்சி உறுப்பினர் ஒருவருடன் ஏற்பட்ட மோதலில் முன்னாள் அமைச்சர் பாரத லக்ஸ்மன் கொல்லப்பட்டார். படுகாயமடைந்த துமிந்த சில்வா தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில், நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.



இதையடுத்து தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சில மாதங்களுக்கு முன்னர் துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழாங்கி விடுவித்தார். பின்னர் அவருக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பதவியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மூளையும் அறிவும்

அந்த ஆளுக்கு மூளை ஜாஸ்தி. அதனால் அவனிடம் கொஞ்சம் பார்த்து நடந்து கொள் என்று சொல்வது உண்டு. மூளை ஜாஸ்தி என்றால் அறிவு ஜாஸ்தி என்னும் அர்த்தத்தில் நாம் அப்படி சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

மூளைக்கும் அறிவுக்கும் சம்பந்தம் உண்டு என்பது சரி.. மூளை அதிகமாக இருந்தால் அறிவும் அதிகமாக இருக்கும் என்பது சரியா?

சாதாரண மனிதனுடைய மூளை அளவுக்கும் அறிவுத்திறனுக்கும் சம்பந்தம் இல்லை என்று தான் இதுவரைக்கும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது,அமெரிக்காவிலே ஒரு ஆராய்ச்சியாளர் அது சரி இல்லை என்கின்றார்.

ஒரு ஆளுக்கு தலை பெரிதாக இருந்தால் அவருக்கு அறிவும் அதிகமாக இருக்கும் என்கின்றார். அவர் அப்படி என்றால் எங்கள் ஊரிலே நிறைய அறிவாளிகள் இருப்பார்கள் போல இருக்கே.

இந்த ஆராய்ச்சியாளர் அமெரிக்காவிலே டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்திலே இருக்கின்றார். லீவில்லர்மான் என்று பெயர். மூளையுடைய அளவு பெரிதாக பெரிதாக அறிவுத்திறனும் அதிகமாகும் என்பது அவருடைய கண்டுபிடிப்பு. அதனால்..தலை பெரிதாக இருப்பவர்கள்.. எங்கள் தலை இப்படி இருக்கின்றதே.. என்று நினைத்து இனிமேல் கவலைப்பட வேண்டாம் அதற்காக பெருமைப்படலாம்.

ஒரு மனிதனுடைய மூளை எவ்வளவு பெரிதாக இருக்கின்றது என்பதை அவன் தலையை திறக்காமல் கண்டு பிடிக்கின்ற வசதியெல்லாம் இப்பொழுது வந்துவிட்டது. எம். ஆர். ஜின்னு பேரு. Magnetic Resonance Imaging இந்த முறையிலே மூளையினுடைய அளவை துல்லியமாக கணக்கெடுத்து விடலாம். அந்த ஆராய்ச்சியாளர் என்ன செய்தார்கள் என்றால் ஒரு 40 மாணவர்களை தேர்ந்தெடுத்தார். ஸ்கானிங் செய்தார். அவர்கள் மூளையுடைய அளவையெல்லாம் குறித்துக் கொண்டார்.

அதன்பின்பு அவர்களுக்கெல்லாம் I.Q.Test வைத்தார். அறிவுத்திறனை கண்டுபிடிக்கின்ற தேர்வு. தேர்வு முடிவுகளை ஆராய்ந்து பார்த்தார்.பார்த்தால் மூளையின் அளவு பெரிதாக உள்ளவர்கள் எல்லோரும் முன்னணியில் இருக்கின்றார்களாம்.பொதுவாக ஒவ்வொருத்தருடைய உடல் வாகுக்கும் உடல் பருமனுக்கும் ஏற்ற மாதிரி மூளையின் அளவில் கொஞ்சம் வித்தியாசம் இருக்கும். அதையெல்லாம் சீராக்கி விட்டு, விகிதாசாரப்படி பார்த்தால் பெரிய மூளை உள்ளவர்களுக்கு கூடுதல் அறிவு இருக்கின்றது என்பது தெரிய வந்தது.

ஆண்களின் மூளை சராசரியாக 1425 கிராம் எடை இருக்குமாம். பெண்களின் மூளை சராசரியாக 1265 கிராம் எடை இருக்குமாம்.

காலப்போக்கில் மனித மூளை வரவர பெரிதாக ஆகிக் கொண்டே வருகின்றதாம். ஆதிகால மனிதனுடைய மண்டை ஓட்டை பார்த்தால் அவர்கள் மூளை இப்பொழுது இருக்கின்றவர்கள் மூளையை விட மிகவும் சின்னதாக இருந்திருக்கின்றது தெரியுதாம்.

கடந்த ஒரு நூற்றாண்டு கால மருத்துவக் குறிப்புகளை ஆராய்ந்து பார்த்ததிலேயும்.. மனித மூளையின் எடை அதிகரித்துக் கொண்டு வருகின்றது தெரிகின்றதாம்.அதனாலே தான் இப்பொழுது இருக்கின்றவர்களுக்கெல்லாம் தலைக்கனம் அதிகமாகிப் போய்விட்டது போல்.

டாக்டர் வில்லர்மான் செய்திருக்கின்ற இந்த ஆராய்ச்சியை அறிவும் அறிவியலும் (Intelligence and Science ) என்கின்ற சஞ்சிகை வெளியிட்டிருக்கின்றது. அது சரி. அதிகப் படியான மூளை அதிகப்படியான அறிவுக்கு எப்படி காரணமாக இருக்க முடியும்?

மூளையுடைய பகுதிகளில் ஒன்று பெருமூளை. அங்கே அதிகமான நியுரான்கள் (நரம்பு செல்கள்)இருக்கிறது. அறிவுத் திறன் அதிகரிக்கிறதற்குக் காரணமாக இருக்கலாம். இல்லை என்றால் அதையெல்லாம் மூடியிருக்கின்ற மையலின் உறை (Myelin Sheath) பெரிதாக இருந்திருக்கலாம்.

இதெல்லாம் அந்த ஆராய்ச்சியாளர் சொல்கின்ற காரணங்கள். யேல் பல்கலைக் கழக உளவியல் பேராசிரியரும் (டாக்டர் . ராபர்ட் ஷல்ட்ஸ்) இதை உறுதிப் படுத்தியிருக்கின்றார்.

எப்படியோ மனிதனுக்கு வரவர மூளையும் பெரிதாகிக் கொண்டு வருகின்றது. அறிவும் அதிகமாகிக் கொண்டு வருகின்றது.அது நல்லது தான். இருந்தாலும் அந்த அறிவு நல்ல விடயத்திற்குப் பயன்பட்டால் பரவாயில்லை. நடை முறையை பார்த்தால் அப்படி தெரியவில்லையே. அது இருக்கட்டும்.

இதைக் கேளுங்கள். சும்மா ஒரு கற்பனை தான். ஒரு வாலிபன்..ஒரு டாக்டரைத் தேடி வந்தான். என் மூளையை கொஞ்சம் சோதனை செய்யுங்கள் என்றான்.

அவர் இவனைப் படுக்க வைத்தார். தலையைத் திறந்தார். மூளையைத் தனியாக எடுத்துக் கொண்டு சோதனைச் சாலைக் குள்ளே போனார். அதற்கு ஏதோ மருந்து போட்டு சிகிச்சையெல்லாம் செய்தார். திருப்பி எடுத்துக் கொண்டு வந்தார்.வந்து பார்த்தால் எங்கேயோ ஓடிப் போய்விட்டான் வெறுந்தலையுடன். சரி வரட்டும் என்று சொல்லி டாக்டர் அந்த மூளையை பத்திரப்படுத்தி வைத்தார். ஒரு மூன்று மாதம் கழித்து அவன் திரும்பி வந்தான். அடடா என்னப்பா! திடீரென்று காணாமல் போய்விட்டாய். உன்னுடைய மூளையை இங்கு பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றேன். வெறுந்தலையோடு இவ்வளவு நாள் என்ன செய்து கொண்டிருந்தாய் என்று கேட்டார் டாக்டர். இவன் மெதுவாக வாயைத் திறந்து இன்று ஒரு தகவல் சொல்லிக் கொண்டிருந்தேன் சேர் என்றார்.




## முட்டாள் பையன்

அவ்வாறே, குதிரையின் வலது காதில் ஏறி இடது காதில் வெளி வந்தான்.

இதுவரை உலகம் கண்டிராத அழகனாக அவன் காட்சியளித்தான்.

பிறகு அவன் குதிரை மீது ஏறி அரசர் ஏற்பாடு செய்திருந்த விழாவுக்குச் சென்றான்.

அரண்மனைச் சதுக்கத்தில் ஒரே கூட்டமாக இருந்தது.

இளவரசி அழகே உருவெடுத்தவளாகத் தனது அறையில் ஜன்னல் அருகே அமர்ந்திருந்தாள்.

விரலில் விலை மதிப்பு உள்ள மோதிரம் அணிந்திருந்தாள்.

தமது கழுத்தை முறித்துக் கொள்ள விரும்பாததால், யாரும் அவளை நெருங்க முயற்சிக்கவில்லை.

ஆனால், சுந்தரம் தனது குதிகால்களைக் குதிரையின் விலாக்களில் குத்தினான்.

குதிரை சீற்ற மடைந்து காற்று வேகத்தில் பறந்து வந்து இளவரசி அமர்ந்திருந்த ஜன்னலின் முன்னால் நின்றது.

சுந்தரம் அவள் விரலில் இருந்த மோதிரத்தைச் சட்டென்று கழற்றிக் கொண்டு, குதிரையைத் திரும்பி மறைந்து



போனான்.

அவன் வீடு திரும்பியபோது, அவனது ஒரு கை கந்தல் துணியால் கட்டுப் போடப்பட்டிருந்தது. "என்ன இது?" என்று அவனுடைய சகோதரர்கள் விசாரித்தனர்.

"ஒன்றுமில்லை, காளான்கள் பறித்துக் கொண்டிருக்கையில் ஒரு முள் குத்தி விட்டது" என்று பதில் அளித்தான்.

(தொடரும்)

# மகாபாரதம்

(184)



கெட்ட புத்தியுள்ளவன் அவையில் என்னதான் பழித்துப் பேசினாலும் அவனைப் பொறுத்துக் கொள்பவர்கள் மலையென அசையாமனம் படைத்தவர்கள் என போற்றப்படுவார்கள். ஏசுபவன் பழியேந்திச் செல்வான். பொறுத்துக் கொள்பவன் புகழுடன் திகழ்வான்.

தருமா, நீ அற்பர் சொல்லைப் பொறுத்துக் கொண்டு புகழ் பெறுவாயாக" என்றார் பீஷ்மர்.

### அரசர்கள் திறம்பட ஆட்சி செய்வது எப்படி?

தருமர் பீஷ்மரை நோக்கி "வேலைக்காரர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?" எனவும், "அரசன் தனக்குத் துணையாக யாரைக் கொள்ள வேண்டும்?" என வினவ பீஷ்மர் கூறலானார்.

உலகியல் அறிவும் நூலறிவும் மிக்க வேலைக்காரர்களைப் பெற்றிருக்கும் அரசன் மேன்மையுற்றவன் ஆவான்.

அரசனது நன்மையை விரும்பும் அமைச்சர்கள் நற்குலத்தில் பிறந்தவராக இருக்க வேண்டும். அரசனுக்கு நல்வழி காட்டுபவர்களாக இருக்க வேண்டும். லஞ்சம் முதலானவற்றால் நெறி கெடாதவராக இருக்க வேண்டும்.

எந்த அரசர் வருங்காலத்தை உணர்ந்து செயற்படக்கூடிய அமைச்சர்களைப் பெற்றிருக்கிறாரோ அந்த அரசர் சிறந்த அரசராகத் திகழ்வார்.

அரசனுக்குத் துணையாக அமைபவர்கள் இன்ப துன்பங்களைச் சமமாக கருதத்தக்க மனப்பக்குவம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

நாட்டின் பொருளைப் பெருக்குவதில் கண்ணும் கருத்துமாய் செயற்பட வேண்டும். ஓர் அரசன் செழிப்புடன் திகழ வேண்டுமாயின் அண்டை நாடுகளும் அமைதியுடன் இருக்க வேண்டும்.

நாட்டில் பொக்கிஷம் நிறைந்திருக்க வேண்டும். நாணயம் மிக்கவர்களால் அது நன்கு காப்பாற்றப்படுமாயின் மன்னனின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி நிற்கும்.

அரசு அதிகாரிகளாக நியமிக்கப் படுபவர்கள் பொருளாசை அற்றவராக இருக்க வேண்டும். எந்த அரசன் அரசு தருமங்களை நன்குணர்ந்து அரச காரியங்களில் வல்லவர்களை நியமித்து ஆறில் ஒரு பங்கை வரியாகப் பெற்றுக் கொள்கிறானோ அந்த அரசன் தருமத்தின் பயனை அடைந்தவன் ஆவான்" என்றார்.

(தொடரும்)

விடாமுயற்சிகளைத் தொடர்ந்து செய்வதே மேதைத்தனம்.

– எல்பர்ட் ஹப்பர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உள்ளூர் உற்பத்தி முயற்சிகளுக்கு வட பகுதி மக்களைத் தயார்படுத்துங்கள்

அனைத்துப் பொருட்களின் விலைகளும் கண்டபாட்டில் ஏற்றம் கண்டுள்ளன.

இந்த விலையேற்றங்கள் எதிர்காலத்தில் குறையும் என்று யாரேனும் நம்பினால் அதை விட்ட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

பொதுவில் ஏறியவிலைகள் இறங்கிய வரலாறு இலங்கையில் இல்லை என்பதுதான் உண்மை.

எனவே எதிர்காலத்தில் பொருட்களின் விலைகள் இன்னும் ஏறுமேயன்றி அவை இறங்கப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இவை ஒருபுறமிருக்க, வெளிநாட்டில் உள்ள உறவுகள் அனுப்புகின்ற பணத்தில் நம்மில் ஒரு பகுதியினர் நுகர்வினை ஈடுசெய்ய, அரச ஊழியர்கள் சம்பளத்தில் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க, ஏதோ காலம் கடந்து போகிறது.

இதனிடையே வர்த்தக முயற்சிகளின் தோல்விகளும் மீற்றர் வட்டி அக்கிரமங்களும் சீரழிந்த சீட்டுக் கலாசாரங்களும் பலரின் உயிரைப் பறித்துவிட்ட பட்டறிவுக்கும் நம்மிடத்தில் குறைவில்லை.

இந்த நிலையில், ஒருபுறத்தில் பொருட்களின் விலையேற்றங்கள் பூதாகரமாக வெளிக்கிட, மறுபுறத்தில் மதுப்பாவனையும் போதைப் பயன்பாடும் எல்லைமீறிய தொலைபேசிப் பாவனைகளும் நம்மவரைக் கந்தறுக்க, எங்கள் எதிர்காலச் சந்ததி எப்படி வாழப் போகிறது – வாழ்க்கைச் செலவை எப்படி ஈடாக்கப் போகிறது என்ற ஏக்கம் ஏற்படவே செய்கின்றது.

இங்குதான் எங்கள் வாழ்வியலுக்கான பொருளாதாரத்தை எங்ஙனம் கட்டியெழுப்ப வேண்டும் என்ற திட்டங்கள் தேவையாகின்றன.

ஆம், விவசாய உற்பத்தியில் நம்மவர்களை ஈடுபட வைப்பதில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் கமத்தொழில் திணைக்களங்களும் இணைந்து கடுமையாகப் பாடுபட வேண்டும்.

நெற்செய்கை முதல் பெருந்தோட்டத் தென்னஞ் செய்கை, விவசாயப் பயிர்ச்செய்கை மற்றும் வீட்டுதோட்டம் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் உணவுப் பொருட்களின் உற்பத்தியை உயர்த்தி அதனூடு எங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் போதிய வருமானத்தை ஈட்டவும் முடியும்.

இவை ஒருபுறத்தில் நடந்து கொண்டிருக்க, இன்னொரு புறத்தில் கால்நடை வளர்ப்பு முயற்சிகளில் சம்பந்தப்பட்ட அமைப்புகள் பொருத்தப்பாடான திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

அதிலும் குறிப்பாக பசு வளர்ப்பு மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கி, அதனூடு கணிசமான வருமானத்தை ஈட்டுவதற்கு வழிகாட்டுவது அவசியம்.

இதுபோல கடலுணவுகளை அதிகரிப்பதிலும் இதர உற்பத்தி முயற்சிகளிலும் எமது மக்கள் ஈடுபடுவதற்கு ஏற்ற வழிப்படுத்தல்கள், உதவித் திட்டங்கள் என்பவற்றை வழங்கி எமது மக்களைக் கடும் முயற்சியாளர்களாக ஆக்குவது காலத்தின் உடனடித் தேவையாகும்.

### க.பொ.த சா/த பரீட்சை

## பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் அடுத்த வாரத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் நுண்கலைப் பாடத்துக்கான செயன்முறைப் பரீட்சை இதுவரை இடம்பெறவில்லை என்றும் அதன் காரணமாகவே க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் தாமதமாவதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஆசிரியர்கள் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள நிலையில் நுண்கலை செயன்முறைப் பரீட்சை நடத்துவதற்கு முடியாதுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதன் காரணமாக க.பொ.த சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவது தாமதமாவதாகவும் எவ்வாறெனினும் அடுத்த வாரத்தில் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

### நாமல் வந்த பின்னர்

## பௌத்த வர்ண மயமான யாழ். பிள்ளையார் குளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மாநகர சபைக்கு சொந்தமான பிள்ளையார் குளத்தைச் சுற்றி, பௌத்த கொடிகளில் காணப்படும் வர்ணங்களை ஒத்தவகையில் நிறம் தீட்டும் செயற்பாடு இடம்பெற்றதை அடுத்து யாழ். மாநகர முதல்வர் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளார்.

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன், மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்ற பிள்ளையார் குளத்தின் சுற்று கம்பங்களுக்கே இவ்வாறு பௌத்த கொடிகளில் உள்ள நிறங்களை பூசும் செயற்பாடுகள் இடம்பெற்று வந்தன.

இவ்வாறான நிலையில், குறித்த குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வரும் நிலையில், குளத்திலிருந்து தூர்வாரப்பட்டு மண்ணை மீண்டும் குளத்தின் சுற்றுப்புறங்களில் கொட்டியதாக குற்றச்சாட்டுகளும் எழுந்தன.

இந்நிலையில், யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்திகள் தொடர்பில் களஆய்வுகளை மேற்கொள்வதற்காக, கடந்த வாரம் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறித்த பகுதிக்கு விஜயம் செய்திருந்தார். அவர் பார்வையிட்டு சென்ற நிலையில் இவ்வாறு இடம்பெறுவது பலருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சர்ச்சையை அடுத்து குறித்த குளப் பகுதிக்கு யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் சென்றார். இதன்போதே வர்ண புச்சு பணிகளை இடைநிறுத்துமாறு அவர் பணித்துள்ளார்.

அருகில் பாடசாலை இருப்பதனால் ஒலிம்பிக் வர்ணமே இதில் பயன்படுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். (ம-3)

### யாழில் பிறந்த தமிழ் பெண்

## நோர்வே பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு

யாழ்ப்பாணத்தில் பிறந்து, நோர்வேயில் வசித்து வரும் கம்ஷாஜினி குணரத்தினம் நோர்வே பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து மூன்று வயதில் நோர்வேக்குச் சென்ற கம்ஷாஜினி குணரத்தினம் தொழிலாளர் கட்சியில் இருந்து போட்டியிட்டார்.

அவர் 21 ஒக்டோபர் 2015 அன்று ஒஸ்லோவின் துணை மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் நடந்த தேர்தலில் நோர்வே பாராளுமன்ற உறுப்பினராக கம்ஷாஜினி குணரத்தினம் தெரிவாகியுள்ளார். (ம-3)

### நாட்டின் சனத்தொகையில்

## 50 சதவீதமானோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது

(கொழும்பு)

நாட்டின் மொத்த சனத்தொகையில் 50 சதவீதமானோருக்கு கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதற்கமைய, நாட்டில் இதுவரையில் ஒரு கோடியே ஆறு இலட்சத்து 72,627 பேருக்கு கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்துள்ளார். (ம-3)

### மருத்துவக் குறிப்பு

சிறு கீரையைச் சுத்தம் செய்து பருப்புடன் சேர்த்து சமைத்து அடிக்கடி சாப்பிட்டுவர இரத்த விருத்தி ஏற்படுவதுடன் உடலும் அழகு பெறும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

'ஆபோ நாராயண: அதாவது தண்ணீரும் நாராயணன் என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சில தண்ணீரைத் தான் பூஜைக்குப் பயன்படுத்தலாம். சில தண்ணீர் வாய் கொப்பளிக்க, பாத்திரம் கழுவ, துணி துவைக்க மட்டும்தான் உதவும் குடிக்கவோ பூஜைக்கோ பயன்படாது.

அதுபோலவே நல்லவன்-கெட்டவன், பக்தன்-பக்தன் அல்லாதவன் என்று எல்லோரின் இதயத்திலும் நாராயணன் இருப்பது என்னவோ உண்மைதான்.

ஆனாலும் தீயவர்கள், பக்தர்கள் அல்லாதவர்கள், துஷ்டர்கள் இவர்களோடு எந்தவித உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது, பழகக் கூடாது. சிலருடன் வெறும் வாய்ப்பேச்சு மட்டும் வைத்துக் கொள்ளலாம். இன்னும் சிலருடன் அதுவும் கூடாது. இத்தகைய மனிதர்களிடமிருந்து விலகியே வாழ வேண்டும்.' (தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

37

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



3ஆவது மாகாணசபைத் தேர்தல்கள் 1999 இல் வடக்கு- கிழக்குத் தவிர்ந்த 7 மாகாணங்களுக்கு நடத்தப்பட்டன. ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி வடமத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளைக் கைப்பற்றியது. ஏனைய மாகாணங்களில் சிறிய கட்சிகளின் துணையுடன் ஆட்சியமைத்தது. 2002 ஆம் ஆண்டில் மத்திய மாகாண சபையின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கான ஆதரவை விலக்கிக் கொண்டதை அடுத்து ஐ.தே.க. அங்கு ஆட்சியை மீண்டும் கைப்பற்றியது.

4ஆவது மாகாணசபைத் தேர்தல்கள் ஏழுமாகாணங்களுக்கு 2004 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. இலங்கையின் ஆளும் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அனைத்து சபைகளையும் கைப்பற்றியது.

வடக்கு- கிழக்கு இணைப்புத் தொடர்பான பொது வாக்கெடுப்பு எப்போதுமே இடம்பெறவில்லை. ஒவ்வோர் ஆண்டும் அரசுத் தலைவர்களால் தற்காலிக இணைப்பாக 2006 வரை நீடிக்கப்பட்டு வந்தது. இலங்கையின் சிங்களத் தேசியவாதிகளால் இந்த இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்தது. இவர்களின் நீண்டகால எதிர்ப்பினை அடுத்து, 2006 ஜூலை 14 இல் மக்கள் விடுதலை முன்னணி கிழக்குமாகாணத்துக்கெனத் தனியே மாகாண சபை நிறுவ வேண்டும் என இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இவ் வழக்கு விசாரணையை அடுத்து அன்றைய அரசுத் தலைவர் ஜெயவர்த்தனவினால் அறிவிக்கப்பட்ட இணைப்பு சட்டவிரோதமானது எனக் கூறி அதனை செல்லுபடியற்றதாக்குவதாக 2006 ஒக்டோபர் 16 இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை அடு த்து 2007 ஜனவரி 1 இல் வடகிழக்கு மாகாணசபை இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கிழக்கு மாகாண சபைக்கு 2008 மே10 இல் முதலாவது தேர்தல் நடைபெற்றது. வட மாகாண சபைதேர்தல்கள் இடம் பெறவில்லை.

2009 இல் வடக்கு மாகாணம் தவிர்ந்த எட்டு மாகாணங்களுக்கு 5 ஆவது மாகாண சபைத் தேர்தல் கள் நடத்தப்பட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிஅனைத்து சபைகளையும் கைப்பற்றியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத் தேர்தல்களில் பங்கேற்கவில்லை.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் மாகாண சபைகள் 2012 ஜூன் மாதம் 27 ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டது. அதற்கமைய இம் மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 08 ஆம் திகதி நடைபெற்றது. இம் முறை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பங்கேற்றது. மத்திய மற்றும் வடமேல் ஆகிய இரண்டு மாகாண சபைகளும் 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி கலைக்கப்பட்டன. இந்த இரண்டு மாகாண சபைகளுக்கும் 2013 செப்டம்பர் 21 இல் தேர்தல்கள் நடைபெற்றன.

### வட மாகாண சபைத்தேர்தல் பற்றிய அறிவிப்பு

வட மாகாணத்தில் சிவில் நிர்வாகத்தின் ஓர் முழுமையான மீள் திரும்புதலுக்கான அதன் சாத்தியத்தையும் மற்றும் அதன்படி, த.வி.பு இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டு நான்கு வருடங்களின் பின்னர் யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் ஜனநாயகம், நல்லிணக்கம் மற்றும் ஐக்கியம் என்பவற்றின் மீது அது கொண்டுள்ள முக்கியத்துவம் என்பவற்றை கவனத்தில் கொண்டும், இத்தேர்தல் தேசியளவிலும் மற்றும் சர்வதேச அளவிலும் வரவேற்கப்பட்டது.

ஜூலை 2012 இல் இந்தியாவின் 'தஹிண்டு' நாளிதழுடனான ஓர் செவ்வியில் அப்போதைய ஜனாதிபதியால் தேர்தல் பற்றி முதலில் குறிப்பிடப்பட்டது. அதில், செப்டெம்பர் 2013 இல் தேர்தல் நடத்தப்படும் என்று கூறினார், எனினும் அத்திகதியில் தேர்தல் நடத்துவது உறுதியளிக்கப்படவில்லை. ஜாதிக ஹெல உறுமய (ஜா.ஹெ.உ) மற்றும் தேசிய சுதந்திர முன்னணி (தே.சு.மு) போன்ற ஆளும் ஐ.ம.சு.கூ இனுள்ள உள்ள குழுக்கள் தேர்தல் நடத்துவதை இடைநிறுத்துவதற்கும் அதேபோன்று அரசியலமைப்பின் கீழ் மாகாணசபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள காணிமற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதற்குமான முயற்சிகளில் முன்னணியில் இருந்தன. எனினும் ஈ-ற்றில் தாங்கள் முயற்சிகளில் அவை வெற்றியடையவில்லை.

வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர், தமிழ்க் கட்சிகள் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை கோரி நிற்கும் என்ற அச்சம் காணப்படுவதாக தேசத்தை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்திருந்தார்.

வடக்கில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனினும் அதற்காக நாட்டின் அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது. இதேவேளை தேர்தலின் பின்னர் வடமாகாணத்திற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை கோரி தமிழ் கட்சிகள் செயற்பாடுகளை மேற்கொள்ளும் என்ற அச்சம் காணப்படுகிறது. இவ்வாறான செயற் பாடுகள் இடம்பெறுமாக இருந்தால், அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என எல்லே குணவன்ச தேரர் மேலும் தெரிவித்திருந்தார்.

தேர்தல் நடத்துவது, மார்ச் 2013 இல் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான தீர்மானத்தில் வரவேற்கப்பட்ட தோடு, குறிப்பாக இந்தியாவிடமிருந்தான சர்வதேச அழுத்தம் மற்றும் செப்டெம்பர் 2013 இல் தேர்தல்கள் நடத்தப்படும் என ஜப்பான் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி என்பன இதற்கு பங்களித்தவையாக பெரிதும் நம்பப்பட்டது.

இந்த முயற்சியிலான இந்தியாவின் ஈடுபாடு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட த.தே.கூ இன் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர், கொழும்பில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான்குர்ஷிட்டுடனான ஓர் சந்திப்பை அடுத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. பொது நலவாய அரசாங்கத் தலைவர்களது மாநாட்டை 2013, நவம்பரில் கொழும் பில் நடத்துவதற்கான இந்தியாவின் ஆதரவு, இந்த விடயம் தொடர்பிலான ஒரு முக்கிய உந்து கோலாக இருந்தது என நம்பப்படுகின்றது.

2013.07.05 ஆம் திகதி1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையை நிறுவுவதற்கான வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அரசியல் அமைப்பின் 154 (அ)(2) ஆம் உறுப்புரைக்கமைய ஜனாதிபதியால் CSA 9/2/8 இலக்க கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டது. இதற்கிணங்க, தேர்தல்கள் ஆணையாளரால் வட மாகாண சபைத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் 2013 ஜூலை 25 முதல் ஒகஸ்ட் 1 வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதற்கிணங்க வட மாகாண சபைத் தேர்தல் 2013 செப்டெம்பர் 21 இல் நடைபெற்றது. இத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இத் தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கத்தை தெரிவித்து நீண்டதொரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தது. அது இங்கு மீள்பதிவு செய்யப்படுகிறது.

இருப்பதைக் காப்போம் ! இழந்ததை மீட்போம்! கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் த.தே.கூ.விற்கு பிரமாண்டமான ஆணை ஒன்றை வழங்கினர். அந்த அரசியல் ஆணைக்கு அமைய கூட்டமைப்பு தொடர்ந்து செயற்பட்டுள்ளதோடு, அந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கு தேவையான ஒரு முதற்படியாக தற்போது வட மாகாண சபைத் தேர்தலை எதிர் கொள்கின்றது. இம் மக்கள் ஆணையின் முக்கிய அம்சங்களை நினைவு கூர்வது இங்கு பொருத்தமானதாகும்.

1948 ஆம் ஆண்டில் காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றபோது இலங்கையில் சாதாரண பெரும்பான்மை ஆட்சி முறையிலான ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையொன்று பலவந்தமாக திணிக்கப்பட்டது. 1949 இல் அண்மைக் கால இந்திய வம்சாவளித் தமிழர்களுள் கணிசமான எண்ணிக்கையிலானோரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை இனத்தவர்களை குடியேற்றும் அரச ஆதரவுடனான குடியேற்றங்கள் தீவிரமடைந்தன. இதன் விளைவாக, 1949 டிசெம்பர் மாதம் இலங்கை தமிழரசுக் கட்சி (இ.த.க) உருவாக்கப்பட்டது.

இந்த பின்னணியில் 1951 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தேசியம் என்பதற்கான எல்லா அம்சங்களிலும் சிங்களவர்களிடமிருந்து வேறுபட்ட ஒரு தனிச் சிறப்பு மிக்க தேசிய இனம் ஆவர் என்பதும் எனவே, சுய நிர்ணய உரிமைக்கு அவர்கள் உரித்துடையவர்கள் என்பதுமான தனது நிலைப்பாட்டை இ.த.க வலியுறுத்தியது.

(தொடரும்...)

## யாழ்.பல்கலைக்...

ஆம், 08ஆம், 09ஆம் திகதிகளில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

நாட்டில் இப்போதுள்ள கொரோனாத் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீக்கப்படுமாயின், சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அதனை நிகழ்நிலையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், தற்போதைய நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய பின்னர் பிறிதொரு நாளில் சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழாவை நடத்தி மாணவர்களுக்குப் பதக்கங்களைப் பெற்றோர் முன்னிலையில் அணிவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களின் ஊடாக மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஊடகச் சந்திப்பின்போது பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும் கலைப்பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர் மேற்கொண்ட ஊடக விபரிப்பின்போதே இந்தத் தகவல்களை வெளியிட்டார். (ம-3,33)

## நாட்டில் மேலும்...

நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,567 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 60 பெண்களும் 76 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## நாட்டில் அத்தி...

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை தொடர்பாக அரசுக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர் அழகப்பெரும, செப்ரெம்பர் 21 முதல் நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பும் என்றார்.

பல வணிக நிறுவனங்கள் செயலற்ற நிலையில் இருக்கும் நேரத்தில் தற்போதைய நிலைமை புரிந்துகொள்ளத்தக்கது என்றும் நாடு ஓரளவு பூட்டப்பட்ட நிலையில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

நாடு நீண்டகாலத்திற்கு பூட்டப்பட்ட நிலையில் இருந்தால், நிதிரீதியாக பொது மக்கள் மிகவும் கடுமையான கவலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் கூறினார். (ம-3)

## பொய்யான...

கூடாது எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை அரசை சர்வதேசக் கண்காணிப்புப் பொறிக்குள் சிக்கவைத்துக் கடும் அழுத்தங்களைக் கொடுத்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் வாய்மூல அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை அரசு ஒருபோதும் தப்ப முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா தீர்மானத்தின் பரிந்துரைகளையும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிறைவேற்றியே தீர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (ம-3)

## ஐ.நாவின்...

குற்றச்சாட்டுக்களை தாங்கள் நிராகரிப்பதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு நீண்டதோர் அறிக்கையையும் அனுப்பி வைத்துள்ளார்.

அதில், கோவிட்-19 தொற்றுநோயின் தற்போதைய மற்றும் அழுத்தமான சவால்களின்கீழ், சமூக வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதிசெய்வதை அரசாங்கத்தின் அடிப்படைக் கடமையாக நாங்கள் கருதுகின்றோம்.

எமது சவால்களை ஒப்புக்கொள்வதில் நாம் வெளிப்படையாக இருக்கின்றோம். பொறுப்பான மற்றும் ஜனநாயக அரசாங்கமாக, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்திதொடர்பான முழு அளவிலான பிரச்சினைகளில் உறுதியான முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தமிழ் மக்களின்...

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

**கேள்வி:-** ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதனை எப்படிப் பார்க்கின்றீர்கள்?

**பதில்:-** தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பல விடயங்கள் பற்றி அவர் குறிப்பிடவில்லை என்பது மனவருத்தத்தைத் தருகின்றது. உதாரணத்திற்கு எமது காணிகளை அரசாங்கம் தந்திரமாகவும் பலாத்காரமாகவும் கையேற்றல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஒருவேளை பல உண்மையான தரவுகளை விபரமாக அவர் எதிர்பார்த்திருக்கின்றாரோ நான் அறியேன். அடுத்த மார்ச் மாதக் கூட்டத்திற்கு முன்னர் இவை பற்றி முழு விபரங்களை நாம் சேகரித்து அனுப்பவேண்டும். எனினும் பல முக்கிய விடயங்களை அவர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவதாகமக்களை வேவுபார்ப்பது அவர்களை அச்சுறுத்துவது மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாட்டாளர்களை, பத்திரிகையாளர்களை, காணாமல்போனோரின் குடும்ப உறுப்பினரைக் குறிவைத்து அவர்களை நீதிமன்றில் நிறுத்துவது போன்ற செயற்பாடுகள் தற்போது விரிவடைந்து மாணவர்களை, கல்வியாளர்களை, மருத்துவர்களை ஏன் மதத் தலைவர்களையும் அரசாங்கம் கண்காணிக்கத் தொடங்கியுள்ளது என்பதைக் கூறியுள்ளார்.

இரண்டாவதாக நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் பற்றிப் பேசினால் போதாது நடைமுறையில் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்றுள்ளார்.

மூன்றாவதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளை உடனே தற்காலிகமாகவேனும் செயலிழக்க வைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

நான்காவதாக 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறில் நடந்த குற்றங்கள் சம்பந்தமான சூத்திரதாரிகளை உடனே கண்டுபிடித்து உண்மையையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டும் என்றுள்ளார். இப்படி பல விடயங்களை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று பொருள்படக் கூறியுள்ளார்.

மேலும் அரசாங்கத்திற்கு சார்பாகவும் பேசி தொடர்ந்து பொறுப்புக்கூறல் விடயத்தில் அவசியமான செயற்பாடுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். மேலும் பொறுப்புக்கூறல் சம்பந்தமான விசாரணைகளை உடனே நடத்த உரிய குழுவை அமைப்பதாகவும் அதற்கான நிதிகளை அங்கத்துவ நாடுகள் பெற்றுத்தரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மொத்தத்தில் நாம் எதிர்பார்த்த பல விடயங்கள் கூறப்படாமல்விட்டாலும் தற்போதைக்கு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளார். அரசாங்கமும் வேறுவழியின்றி அதற்கு இசைந்துள்ளது. பணம்தான் பிரச்சினை. அத்துடன் நாம் நடப்பவை பற்றிய உண்மை விபரங்களை பட்டியலிட்டு அவருக்கு அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம் என்று தெரிவித்தார். (ம-3)

# சிவில் விவகாரங்களில் இராணுவம் ஈடுபடவில்லை

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

நாட்டில் தற்போது எந்தவொரு பாதுகாப்புத் தரப்பினரும் சிவில் விவகாரங்களில் ஈடுபடவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது அவசரகாலச் சட்டம் மற்றும் இராணுவ மயமாக்கல் நடவடிக்கை குறித்த ஐ.நா ஆணையாளரின் கருத்து தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அண்மையில் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காககூட அரசாங்கம் படையினரைப் பயன்படுத்த வில்லை என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார். (ம-3)

## யாழில்...

கில் கொரோனாத் தடுப்பூசிபெற்றுக் கொள்ளாத நிலையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கரணவாய் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் 5 நாட்களுக்கு முன்னர் அதிக சளி ஏற்பட்டதால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவர் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேசத்தில் உயிரிழந்த 71 வயதான நபருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,60)

## கொடிகாமத்தில்...

கொடிகாமம் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் இயற்றாலை பகுதியைச் சேர்ந்த ராஜன் சிந்துஜன் (வயது - 24) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இயற்றாலை பகுதியில் நேற்றைய தினம் இரவு 9.30 மணியளவில் குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## புலம்பெயர்...

ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நேற்று முன்தினம்மனிதஉரிமைஆணையாளர் மிச்செல் பச்லெட் முன்வைத்த இலங்கை தொடர்பான அறிக்கையிடலுக்கு நேற்று இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பதிலளித்து உரை நிகழ்த்தியிருந்த நிலையில் இவர்களது போராட்டம் இடம்பெற்றிருந்தது.

தமிழ்ப் பண்பாட்டு வலயம் மற்றும் அனைத்துலக மனித உரிமைச் சங்கம் ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் தமிழினப் படுகொலைக்குரிய சாட்சியப் பதிவுகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (ம-3)

## வவுனியாவில்...

தாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 104 வயது மூதாட்டி உட்பட 11 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

இந்நிலையில், மரணித்த 11 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை வவுனியா, மூனாமடு கிராமத்தைச் சேர்ந்த குறித்த 104 வயது கதிரவேல் அமிர்தம் என்ற மூதாட்டியே மரணமடைந்தவராவார். வவுனியாவில் அதிகூடிய வயதில் மரணித்த முதலாவது மூதாட்டியாக இவரே கணிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,250,299)

# வவுனியாவில் மேலும் 91 பேருக்கு தொற்று

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 91 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 91 பேருக்கு மேலும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ம-03,250)

## உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய 129 பொருட்களின் இறக்குமதிக்கு தடை

(கொழும்பு)

பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக, உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய 129 பொருட்களின் இறக்குமதியை இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பேசிய அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, ஒரு நாடாக முன்னேற, உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றார்.

இந்த நடவடிக்கையில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகிறது. ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் தேவையான அனைத்தையும் தனிநபர்களால் பெறப்பட வேண்டும் என்ற கருத்தை கொண்டுள்ளது.

கோவிட் தடுப்பூசிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக அரசாங்கம் பெரிய தொகையை செலவழித்து வருவது தெளிவாகத் தெரிகிறது. உலக சுகாதார நிறுவனம் இலங்கையைத் தடுப்பூசி இயக்கத்தில் முன்னணி நாடுகளில் ஒன்றாக ஒப்புக்கொண்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

(ம-03)

## அநுராதபுர சிறையில் இராஜாங்க அமைச்சர் லொகான்
# தமிழ் அரசியல் கைதிகளை மண்டியிடவைத்து மிரட்டல்
## கஜேந்திரகுமார் எம்.பி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளை வரவழைத்து, அவர்களில் இருவரை மண்டியிடச் செய்து, துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியுள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது கீச்சகத்தில் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செப்ரெம்பர் 12ஆம் திகதி மாலை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர், தமிழ் அரசியல் கைதிகளை வரவழைத்து, அவர்களில் இருவரை அவருக்கு முன்னால் மண்டியிட வைத்தார் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

இராஜாங்க அமைச்சர் அவர்களை நோக்கி தனது தனிப்பட்ட துப்பாக்கியைக் காட்டி அவர்களை அந்த இடத்திலேயே கொன்று விடுவதாக மிரட்டினார்.

இராஜாங்க அமைச்சரின் இந்த மோசமான நடத்தையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகக் கடுமையான முறையில் கண்டிக்கிறது என்றுள்ளது. (ம-03,33)

## 6 ஆயிரம் தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கலாம்
### இலங்கை மருத்துவ சங்கம்

(கொழும்பு)

நாடு இன்னமும் சிவப்பு வலயத்திலேயே உள்ளது. நாளாந்தம் சுமார் 2 ஆயிரம் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதன் மூலம் 6 ஆயிரம் தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கின்றனர் என்பது தெளிவாகிறது.

அதற்கமைய நாடு என்ற ரீதியில் கோவிட் அபாயத்திலிருந்து நாம் இன்னும் மீளவில்லை என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடு என்ற ரீதியில் கோவிட் அபாயத்திலிருந்து நாம் இன்னும் மீளவில்லை. தற்போதும் நாளாந்தம் சுமார் 2 ஆயிரத்திற்கும் அதிக தொற்றாளர் எண்ணிக்கை பதிவாகிக் கொண்டிருக்கிறது.

அதற்கமைய சமூகத்தில் சுமார் 6 ஆயிரம் தொற்றாளர்கள் காணப்படுகின்றார்கள் என்பது தெளிவாகிறது. அதேபோன்று நாளாந்தம் சுமார் 150 மரணங்களும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. தற்போது பிரதானமாக பரவிக் கொண்டிருப்பது டெல்டா பிறழ்வு என்பதும் சகலரும் அறிந்த விடயமாகும்.

நாடு இன்னமும் சிவப்பு வலயத்திலேயே உள்ளது. அதேபோன்று மீண்டுமொரு அலை உருவாகி அதனால் வைத்தியசாலை கட்டமைப்புக்கள் நிரம்பி வழியக்கூடிய நிலைமையையும் நாம் கடக்கவில்லை என்றார். (ம-03)




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.